# முன்னுரை

நம் கர்னாடக சங்கீதம் நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வருகிறது. குழந்தைகள் திரை காணங்களையே அதிகம் விரும்புகின்றனர். திரை கானம் என்றால் தரக் குறைவு என்று நான் சொல்லவில்லை. ஆபாசக் கருத்தில்லா சில திரைப்படப் பாடல்கள் கர்னாடக சங்கீதத்தின் சிறப்பினையே காட்டுகின்றனது. அவைகளை குழந்தைகள் அழகாகப் பாடுகிறார்கள். காரணமென்ன வென்றால், அப்பாடல்கள் அவர்களுக்குப் புரியும் படியான விதத்தில், சுலபமான மெட்டில் அமைந் திருப்பதேயாகும். இதே குழந்தைகள் நம் கர்னாடக சங்கீதத்தை கேட்பதுமில்லை. கற்றுக் கொள்ள விரும்புவதுமில்லை. அவர்களைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. ஈடில்லா சிறப்பு மிக்க நம் கர்னாடக சங்கீதத்தை குழந்தைகளுக்கு, கற்பிக்கச் செய்வது நமது முக்கியமான கடமையாகும்.

முதலில் குழந்தைகளுக்கு இசையில் ஆசை உண்டாக்க வேண்டும். அதற்கு பாடல்கள் கடினமாக இல்லாமலிருக்க வேண்டும். உருட்டல் அதிக கமகங்கள் இல்லாதவைகளாக இருக்கவேண்டும். அதை விட்டு கடினமான பாடல்களை கற்பித்தோமானால் தவறாக பாடுவார்கள். ஆரம் பத்தில் தவறாக பாட பழகி விட்டால் கடைசி வரை அது மாறாது. சரிவர பாடவராததால் பாட விரும்புவதில்லை. வெறுப்பும் வந்து விடுகிறது. இதைத் தவிர்த்தேயாக வேண்டும்.

தற்காலத்தில் மேல் வகுப்புப் பாடங்களை யெல்லாம். கீழ் வகுப்பிலேயே கலபமான வழியில் புகட்டி விடுகிறார்கள். அதனைப் போல இப் பாடல்களை எடுத்த எடுப்பிலேயே கற்றுத்தரலாம். குழந்தைகளுக்குக் கட்டாயம் வரும். பழைய வழக்கப்படி ஒரு வருடம் மாயமாளவ கௌளத்திலேயே வரிசைகள் சொல்லிக் கொடுத்து வாட்டும் வழக்கம் நீங்க வேண்டும். இந்த வரிசைகளை யெல்லாம் பாடல்களோடு சொல்லிக் கொடுத்தால், குழந்தைகள் ஒரே வாரத்தில் பாடிவிடுவார்கள். இப்பாடல்களின் விவரத்தை, டாக்டர் சீதா அவர்கள் விவரமாக விவரித் துள்ளார். இப்பாடல்களை 5 வயதுக் குழந்தைகள் கூட பாட முடியும். இப்பாடல்கள் சிலவற்றை மும்முறை குழந்தைகள் கச்சேரி செய்துள்ளனர். தூரதர்சனில், கண் மணிப் பூங்காவில் ஓர் குழந்தை பாடியுள்ளாள்.

பல வித்வான்களும் இம்மாதிரிப் பாடல்கள் தற்போது, அவசியம் தேவையென்று கூறிய தாலும், எனது கணவரும் ஒத்துழைப்பு தந்ததாலும் இப்புத்தகத்தை வெளியிட துணிந்தேன்.

சென்னை பல்கலைக் கழக இசைத் துறைத் தலைவர் டாக்டர் சீதா அவர்கள் மனுமுவந்து இப்புத்தகத்திற்கு மதிப்புரை தந்துள்ளார். அவர்களுக்கு எனது நன்றி கலந்த வணக்கம்.

இப்புத்தகத்தை சீரிய முறையில் அச்சிட்டுத் தந்த ‘தன்யகுமார்’ அச்சகத்தார்க்கு எனது நன்றி.

மொழிகளின் விரோதி நானில்லை யென்றாலும், மகாகவி சுப்ரமண்ய பாரதி அவர்கள் கூறியது போல ‘யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்’ என்ற கருத்தில் ஊறியவள் அதனால் குழந்தைகளுக்கு, ஆரம்பத்திலேயே, தேனினும் இனிய தமிழில், இசையைப் புகட்டும் எண்ணத்துடன் இப்பாடல்களை இயற்றியுள்ளேன். இப்பாடல்களை குழந்தைகள் விரும்பி பாடுவார்கள். சுருதிலய, ராக ஞானம் உண்டாகும், தமிழ்ப் பற்றும் தானாக உண்டாகும். நல்ல நீதிக’ளும் நமது புராணக் கதைகளை அறியும் வாய்ப்பும் ஏற்படும்.

இப்பாடல்களை எல்லா குழந்தைகளும் பாடி நலம் பெற இறைவனை இறைஞ்சி வணங்குகின்றேன்.

51, விஜயராகவாச்சாரி தெரு,
தி. நகர், சென்னை 17.

இப்படிக்கு
**டி. பட்டம்மாள்**